IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 49 /2015
Deposition of witness for PW1

Name : சுப்பிரமணி

Father Name : அண்ணாமலை

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26 day of April, 2023.

2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் தற்சமயம் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, வேலூர் கிளையில் ஆயுத காவலராக பணியாற்றி வருகிறேன். அதற்கு முன் இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். அதற்கு முன்னிட்டு நான் பட்டுபூச்சி வளர்ப்பு தொழில் செய்துவந்தேன். எனது 17 வயதில் இராணுவத்தில் சேர்ந்தேன். வழக்கு சொத்தை நான் 1988-ல் வாங்கினேன். அதே வருடத்தில் தான் இராணுவத்திலும் சேர்ந்தேன். நான் கூறுவது உண்மையாக இருக்கும்பட்சத்தில் என்னுடைய 17 வயதில் வழக்கு சொத்தை வாங்க எனக்கு தகுதியில்லை என்பதால் வழக்கு சொத்தை நான் வாங்கியதாக கூறுவது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சாட்சி தற்பொழுது 17 வயது முடிந்து 18 வயது நடந்து கொண்டிருந்தபோது தான் இராணுவத்தில் சேர்ந்ததாக கூறுகிறார்.

2. வழக்கு சொத்தின் மூலபத்திரம் எங்கு உள்ளது என்றால் என் வீட்டில் என்னிடம் தான் இருந்தது. என் அண்ணனான 1ம் பிரதிவாதி என்வீட்டில் இருந்தபோது மூலபத்திரத்தை 2014-வருடத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே எடுத்துச்சென்றுவிட்டார். அவ்வாறு நான் கூறுவது உண்மையாக இருக்கும்பட்சத்தில் நான் தாக்கல் செய்த இவ்வழக்குரையில் அசல் மூலப்பத்திரம் என்னிடம் உள்ளதாக தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் 1ம் பிரதிவாதி மூலப்பத்திரத்தை எடுத்து சென்றுவிட்டதாக என்னுடைய வழக்குரையிலும், சாட்சியத்திலும் குறிப்பிட்டு நான் கூறவில்லை என்றால் சரிதான் நான் காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளேன்.

3. நான் கூறுவதுபோல் காவல்நிலைய புகார் உண்மையாக இருக்கும்பட்சத்தில் அதனை நிரூபிக்கும் வகையில் எந்த ஒரு ஆவணங்களையும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் எந்த ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக அவ்வாறு கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து ஆதியில் முனுசாமி மற்றும் சொக்கலிங்கம் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இருவரும் என்னுடைய தாய் மாமாக்கள். என் அண்ணனின் பெயர் சுப்பிரமணியம். அவரும் இராணுவத்தில் தான் பணிபுரிந்தார். அவருக்கும் எனக்கும் வயது வித்தியாசம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது.

4. எனக்கு முன்பே என் அண்ணன் இராணுவத்தில் சேர்ந்துவிட்டார் என்றால் சரிதான். நான் இளவராக இருந்தபோது என் அண்ணன் இராணுவத்தில் பணியாற்றி அதில் வந்த வருமானத்தைக்கொண்டு தான் வழக்கு சொத்தை அவர் கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 பட்டா ஆனது 1ம் பிரதிவாதியின் பெயரில் தான் உள்ளது என்றும், அவருடைய பெயரும், என்னுடைய பெயரும் ஒன்று போல் இருப்பதால் அதை பயன்படுத்திக்கொண்டு ஆவணங்களை தவறாக பயன்படுத்துகிறேன் என்றால் சரியல்ல.

5. 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியிடமிருந்து வழக்கு சொத்தை சரியான பிரதிபலனுக்குத்தான் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். எனக்கும், என் அண்ணனுக்கும் இடையே குடும்ப தகராறு இருந்துவருகிறது என்றால் இவ்வழக்கு சொத்தை விற்றபிறகு தான் எனக்கும் என் அண்ணனுக்கும் பிரச்சனையானது அதற்கு முன்பு எந்த பிரச்சனையும் இல்லை. அவ்வாறு சொத்தை விற்றது எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை கிரையம் கொடுத்த அன்றே சுவாதீனம் 2ம் பிரதிவாதியிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். சாட்சி தற்பொழுது மாற்றி நான் தான் சுவாதீனத்தில் இருந்துவருகிறேன் என்று கூறுகிறார்.

6. நான் கிரையம் பெற்றதாக கூறும் கிரையப்பத்திரத்தை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் உண்மையாக கிரையம் பெற்றிருந்தால்

அதன் அசல் ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றும், அவ்வாறு எந்த ஒரு கிரைய ஆவணத்தையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ1 2013-ல் வழங்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். தற்பொழுது வழக்கு சொத்தின் பட்டா மற்றும் அனைத்து வருவாய் ஆவணங்களும் 2ம் பிரதிவாதி லட்சமணன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அதனை ஆட்சேபித்து நான் வருவாய் அதிகாரிகளிடம் மனு அளித்துள்ளேன்.

7. 2ம் பிரதிவாதி சுவாதீனத்தில் இருப்பதினால் தான் அவர் பெயருக்கு வருவாய் ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி பெயரிலான கிரைய ஆவணத்தை செல்லாது என்று விளம்புகை செய்யக்கோரி மட்டுமே பரிகாரம் கேட்டுள்ளேன் என்றும், சுவாதீனத்தை மீட்கக்கோரி எந்த பரிகாரமும் நான் கோரவில்லை என்றும் சொன்னால் சரிதான். 2ம் பிரதிவாதி சரியான பிரதிபலனுக்குத்தான் வழக்கு சொத்தை கிரையம் பெற்று சுவாதீனத்திலும் இருந்துவருவதால் அவருடைய உரிமையை நான் கேள்வி கேட்க எந்த அறுகதையும் எனக்கில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை கிரையம் பெற்றது 1ம பிரதிவாதியான என் அண்ணன் தான் என்றும், எனக்கும் அந்த கிரையத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

8. வழக்கு சொத்திற்கு 1ம் பிரதிவாதி தான் உரிமையாளர் என்றும், ஆதலால் உரிய உரிமையாளரிடமிருந்து 2ம் பிரதிவாதி கிரையம பெற்றது சட்டப்படி செல்லத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் வழக்கு சொத்தின் சுவாதீனம் கோரி பரிகாரமும் கோராமல் அதற்குரிய நீதிமன்ற முத்திரைக்கட்டணம் செலுத்தாததாலும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எனக்கும் என் அண்ணனுக்கும் இடையிலான குடும்ப பிரச்சனையில் பழிதீர்க்கவேண்டி உரிய முறையில் கிரையம் பெற்ற 2ம் பிரதிவாதியை இவ்வழக்கில் சேர்த்துள்ளதும் அவருக்கு எதிராக பரிகாரம் கோரியுள்ளதும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

9. 2ம் பிரதிவாதி என்மீதும் என் மனைவி மீதும் இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 24/2015 போட்டுள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி மேற்படி வழக்கில் எங்கள் மீது தாக்கல் செய்த பின்பு தான் இவ்வழக்கை அவர் மீது நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 2ம் பிரதிவாதி தாக்கல் செய்திருந்த வழக்கின் போதே இவ்வழக்கு சொத்தை 2ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றும், அப்படியிருக்க இவ்வழக்கில் வா.சா.ஆ3 சொத்து தொடர்பான வில்லங்கசான்று பெற்றபின்பு தான் கிரையம் பெற்றது தெரியவந்ததாக கூறியுள்ளது தவறு என்றும், ஆதலால் இவ்வழக்கிற்கு வழக்குமூலமே தவறு என்றும் சொன்னால் சரியல்ல. எனவே இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் இவ்வழககை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

K VENKATESAN Digitally signed by K VENKATESAN

DISTRICT MUNSIF

KATPADI.